# RTO சம்பத்குமாரின் தில்லாலங்கடி!

# அரசு கவனிக்குமா?



RTO சம்பத்குமார்

போக்குவரத்து துறையில் RTO–க்களது பணியிட மாற்றத்திற்கான பட்டியல் தயாராகி கொண்டிருக்கும் வேளையில், முதல் தொடக்கத்திலே சம்பத்குமாரின் தில்லாலங்கடி வேலைகள் தொடங்கிவிட்டது.

அரசு விதிகளை மீறி மீண்டும் ஒரு வருடத்திற்குள்ளே திருச் செந்தூரில் இருந்து சென்னைக்கே பணியிட மாற்றம் பெற்று ரெட்ஹில்ஸ் RTO–வாக வர உள்ளார் போக்குவரத்துறையவே 'ஆட்டய' போட்ட சம்பத்குமார்.

இவரது சர்விஸில் சென்னையை மட்டுமே தக்க வைத்து தொடர்ந்து கோலோச்சி வந்த சம்பத்குமாரை, கடந்த வருடம்தான் சென்னையைவிட்டு திருச்செந்தூர் RTO–க்கு நமது பெரும் முயற்சியால் பணியிடமாற்றம் செய்யப்பட்டது.

இப்படி நம்மால் கடந்த ஆண்டில்தான் இவருக்கான பணியிட மாற்றத்திற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என்பதை நாம் மார்தட்டிச் சொல்லலாம் இதனை போக்குவரத்து துறை அதிகாரிகள் அனைவரும் அறிவர் அந்தளவுக்கு மிகப்பெரும் ஊழல் சக்ரவர்த்தி யான இவர் மீது நம்மால் பல புகார்கள் கொடுக்கப்பட்டு பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

அதுமட்டுமல்லாது திருச்செந்தூரில் பணியில் இருந்து வரும் RTO சம்பத்குமார், வார இறுதிநாட்கள் முழுவதுமே சென்னைக்கும், தூத்துக்குடிக்கும் விமானம் மூலம் பறந்து வந்து சென்னையில் உள்ள அவரது மற்ற தொழில்களை கவனித்து வந்தார். இந்த நிலையில், தற்போது திருச்செந்தூரிலே தங்கியிருந்து மூன்று வருடங்கள் முடிக்க வேண்டிய பணிகளை நிறுத்தி, ஒரே வருடத்தில் மீண்டும் பணியிட மாற்றம் பெற்று சென்னைக்கு திரும்ப உள்ளார், இது எப்படி சாத்தியமாகிறது ? அரசு செயலர்கள் கவனத்தில் கொள்வார்களா ?

இப்படி விமானம் மூலம் மாவட்டம் விட்டு, மாவட்ட தாண்டி ரெகுலராக சென்னைக்கு போய் வர







மாவட்ட ஆட்சியரும், சம்பந்தப் பட்ட துறை அதிகாரிகளும் இவருக்கு எப்படி, எதற்காக அனுமதித்தார்கள் ?

அரசின் விதிப்படி அலுவலக பகுதிக்குள் தங்கியிருந்து பணி புரிய வேண்டும் என்ற விதிகளை இவர் மீறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் RTO சம்பத் குமாருக்கு அனுமதியளித்தது எப்படி ?

இவரது விமான பயண நேரம் என்ன ? பயண நேர காலங்களில் எல்லாம் இவரது பணிகளின் நிலைகள் என்ன ? பணி முடித்தும் முடிக்காமலும், அவசர அவசரமாக திருச்செந்தூரில் இருந்து தூத்துக்குடிக்கு காரில் பயணமாகி வெள்ளிகிழமை அங்கிருந்து கிளம்பு வதும், சென்னையில் இருந்து திங்கள்கிழமை அல்லது செவ்வாய்கிழமை மதியத்திற்கு மேல் சென்று, பணிவரவு பதி வேட்டில் அவரது கையொப்பத்தை முறைகேடாக பதிவு செய்தும், பணி செய்த நாட்கள் முழுவதும் முறை கேடுகளை செய்து பறந்து பறந்து



அமைச்சர் சிவசங்கர்



இறையன்பு ஐ.ஏ.எஸ்.



பனீந்திர ரெட்டி ஐ.ஏ.எஸ்.



நிர்மல்ராஜ் ஐ.ஏ.எஸ்.

வந்த இந்த ஊழல் அதிகாரியான சம்பத்குமாருக்கு அரசு விதிகளை மீறி (மூன்று வருடத்திற்கு ஒரு முறை பணியிட மாற்றம்) இவருக்கு மட்டும் ஒரே வருடத்தில் பணியிட மாற்றம் செய்வது எப்படி ? இந்த பணியிட மாற்றத்திற்கு மட்டும் இவரிடமிருந்து ஒரு கோடி கை மாற்றப்பட்டிருப்பதை என்னவென்று சொல்வது ? என சக அதிகாரிகளும், விபரமறிந்த பலரும் எழுப்பும் கேள்விக்கு அரசு செயலர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்.

தலைமையிடத்தில் எல்லாம் நேர்மையான அதிகாரிகள் ஆட்சிக்கு சிறப்பு சேர்க்கும் நிலையில், RTO சம்பத் குமாரின் இந்த ஊழல் பணிக்கான மற்றும் பணியிட மாற்றத்திற்கும் ஆய்வுகளை அந்த மதிப்பிற்குரிய செயலர்கள் மேற்கொள்வார்களா ?



சுந்தரசாமி ஐ.பி.எஸ்.

RTO சம்பத்குமார் Suspend செய்யப்பட வேண்டிய ஒரு அதிகாரி. இப்படி பணியிடை நீக்கம் செய்யப்பட வேண்டிய இவருக்கு, அரசு விதிகளை எல்லாம் புறந் தள்ளிவிட்டு, எப்படி இப்படியொரு பணியிட மாற்றத்தை அரசு வழங்குகிறது ?

மேலும், தற்போது உள்ள ரெட்ஹில்ஸ் RTO – இளமுருகுவிற்கு உரிய பணியிட மாற்றத்திற்கான காலங்கள் முடிவதற்கு முன்பே, RTO இளமுருகுவை பணியிட மாற்றம் செய்வது எப்படி ? அப்படியானால் RTO சம்பத்குமாரின் பணியிட மாற்றத்திற்கான முறைகேடுகளுக்கு உயர் போக்குவரத்து அதிகாரி களும் தலைவணங்குவதுபோல் அல்லவா ஆகி விடும் ?

எனவே, சம்பந்தப்பட்ட அரசு செயலர்கள் அதிரடியான நடவடிக்கை எடுத்து சம்பத்குமாரின் பணியிட மாற்றத்தை ரத்து செய்து, அரசு விதியின் படி மூன்று வருட காலத்திற்கு திருச்செந்தூரிலே தங்கியிருந்து பணியமர்த்துவதற்கான நடவடிக்கை களை எடுக்க வேண்டும் என பணிந்து கோரு வதோடு, நாமும் இது சம்பந்தமாக உயர்நீதி மன்றத்தை அணுகி உரிய நீதிகளை கோர உள்ளோம்.

அதேபோல், RTO சம்பத்குமாரின் பணியிட மாற்றத்திற்காக கொடுக்கப்பட்ட ஒரு கோடி யாருக்கு கைமாற்றப்பட்டது என்பதை அதிரடியான விஜிலென்ஸ் இயக்குனர் அவர்கள் விசாரித்து உரிய நடவடிக்கைகளைத் தொடர்வார்களா?

மேலும், அரசு விதிகளை மீறி சம்பத்குமாருக்கு எப்படி இந்தப் பணியிட மாற்றம் கொடுக்கப் படுகிறது ? எந்தவித ஆதாயமும் இல்லாமல் இந்த முறைகேடான பணியிடமாற்றம் நடக்குமா ? என பல்வேறு கேள்விகள் எழும் நிலையில் உரிய நடவடிக்கைக்குப் பணிந்து கோருகிறோம்.

தற்போது RTO சம்பத்குமாரின் பணியிட மாற்றத்தை அறிந்த ரெட் ஹில்ஸ் ஓட்டுனர் பயிற்சிப் பள்ளிகளும் அய்யகோ... மீண்டும் ‘பெரிய சாக்கு பையா’ என கேள்வி எழுப்புவதை நேர்மையான அதிகாரிகளான தலைமை செயலர் மற்றும் உள்துறை செயலர், அதிரடியான போக்குவரத்து ஆணையர் மற்றும் அமைச்சரின் காதுகளுக்கு சென்று சீர்தூக்கி பார்த்தால் ரெட்ஹில்ஸ் மக்கள் நிம்மதி பெறுவார்கள்.

தற்போது ரெட்ஹில்ஸ் RTO அலுவலகத்தில் உள்ள அதிகாரியான இளமுருகு என்னவோ “இதுவும் கடந்துபோகும்” என அமைதி காக்கிறார்.

பணம் பத்தும் செய்யும் என RTO சம்பத்குமார் சவால் விடுத்து வந்தாலும் கோவில்பட்டியார்கள் எடுக்கும் நடவடிக்கைகளில் அது பதினொன்றையும் செய்யும் என்பதும் முடிவாகத் தெரியும். என்ன நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

**நெல்லை கோபால்**
மூத்த பத்திரிகையாளர்
9994478389

04–08–2022